


**31. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தமிழ்நாட்டில் பால் கொள்முதல் விலை லிட்டருக்கு 44 ரூபாயாக உயர்த்தப்படுவதாக முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார்.

திருச்சி மற்றும் சுற்றுப்புற மாவட்ட பகுதிகளில் பல்முனை சரக்கு போக்குவரத்து மையம் ஏற்படுத்தப்படும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

2. சென்னை மாநகரில் போராட்டம் மேற்கொள்ளும் தூய்மை பணியாளர்களின் கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் திரு. ராஜ்மோகன் உறுதி அளித்துள்ளார்.

3. தஞ்சை மயிலாடுதுறை புதுக்கோட்டை தர்மபுரி சேலம் திருப்பூர் திருவாரூர் மாவட்டங்களில் புதிய விதை சேமிப்பு கிடங்குகள் அமைக்கப்படும் என்று வேளாண் அமைச்சர் திரு. வினோத் பேரவையில் கூறியுள்ளார்.

4. மேட்டூர் அணை டெல்டா பாசனத்திற்காக நாளை திறக்கப்படுகிறது.

5. திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் ஆவணி திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இனி விரிவான செய்திகள்

****************

முதலமைச்சர் 110

தமிழ்நாட்டில் பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில் பால் கொள்முதல் விலை லிட்டருக்கு 44 ரூபாயாக உயர்த்தப்படுவதாக முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் அவை விதி 110-ன் கீழ் இன்று அறிக்கை தாக்கல் செய்து பேசிய முதலமைச்சர், கரவை மாடுகளுக்கான பசுந்தீவனம் மற்றும் இடுபொருட்களின் விலை அதிகரித்துள்ளதை கருத்தில் கொண்டு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல சங்கங்களின் கோரிக்கையை ஏற்று இந்நடவடிக்கை என்றார்.

இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 720 கோடி ரூபாய் கூடுதல் செலவு பிடிக்கும் என்றும் தெரிவித்தார்.

வாய்ஸ்

அவை விதி 110ன் கீழ் பல்வேறு அறிக்கைகளை தாக்கல் செய்து பேசிய அவர், எரிசக்தி துறை சார்பில் 33 ஆயிரத்து 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் தொடரமைப்பின் கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்.

இதன்கீழ் 196 புதிய துணை மின் நிலையங்கள், 15 ஆயிரம் கிலோ மீட்டர் நீள புதிய மின் பாதைகள் அமைக்கப்படுவதுடன் ஏற்கனவே உள்ள மின் பாதைகள் வலுப்படுத்தப்படும் என்று கூறினார்.

தூத்துக்குடி அனல் மின் நிலைய வளாகத்தில், பொது தனியார் கூட்டாண்மை முறையில், தலா 800 மெகாவாட் திறன் கொண்ட, இரண்டு அலகுகளுடன் ஆயிரத்து 600 மெகாவாட் திறன் கொண்ட ஒரு புதிய சூப்பர் க்ரிட்டிக்கல் அனல் மின் நிலையம், 20 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்றும் தெரிவித்தார்.

ஆயிரத்து 762 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு மின்துறை பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

காஞ்சிபுரம் மாவட்டம் மதுரமங்கலத்தில் 175 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செமி கண்டெக்டர் மின்னணு உற்பத்தி பூங்கா நிறுவப்படும்,

கோவையில் டிஜிட்டல் நிதி தொழில்நுட்ப மையம் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்,

திருச்சிராப்பள்ளி மற்றும் அதன் சுற்றுப்புற மாவட்ட பகுதிகளில் பல்முனை சரக்கு போக்குவரத்து மையம் அமைக்கப்படும் என்றும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

***************

ஆதவ் அர்ஜுனா

சென்னை அருகே செம்மஞ்சேரி பகுதியில் உலக தரத்திலான சர்வதேச விளையாட்டு மையம் அமைக்கும் திட்டம்

கைவிடப்படவில்லை என்று பொதுப்பணி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜுனா கூறினார்.

பேரவையில் இன்று இதுதொடர்பான எதிர்கட்சி தலைவர் திரு.உதய நிதி ஸ்டாலின் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் இம்மையம் 46 வகையான விளையாட்டுகளை உள்ளடக்கிய விளையாட்டு மையமாக உலக தரத்தில் மறு கட்டமைப்பு செய்யப்படுவதாக கூறினார்.

நேபாள வெள்ளத்தில் சிக்கிய தமிழர்களை மீட்பதற்குரிய நடவடிக்கைகள் குறித்த கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர், இதுவரை 220 பேர் பத்திரமாக மீட்கப்பட்டிருப்பதாகவும், 84 பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை என்றும் அவர்களையும் கண்டறியும் நடவடிக்கைகளை அரசு விரைவாக மேற்கொள்வதாகவும் கூறினார்.

டெல்லியில் உள்ள அவசர கட்டுப்பாட்டு அறையிலிருந்து தேவையான விவரங்களை நேபாள அரசிடம் கேட்டறிந்து தமிழக அதிகாரிகளும் அமைச்சர்களும் மீட்பு நடவடிக்கையில் முனைப்புடன் ஈடுபட்டதாக அவர் தெரிவித்தார்.

****************

ராஜ்மோகன்

சென்னை மாநகரில் போராட்டம் நடத்தி வரும் தூய்மை பணியாளர்களின் கோரிக்கைகளை படிப்படியாக அரசு நிறைவேற்றி வருவதாக மாநில பள்ளி கல்வி மற்றும் செய்திதுறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

சட்டப் பேரவையில் இன்று இதனை தெரிவித்த அவர், தூய்மை பணியாளர்களுக்கு சீருடைகள் ரெயின்கோட் புதிய வாகன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

குப்பை அள்ளும் பழுதடைந்த வாகனங்களுக்கு பதிலாக 450 புதிய 3 சக்கர வாகனங்கள் வழங்கப்படும் என்றும், தெரிவித்தார்.

மீண்டும் வருகை பதிவேடு முறையே நடைமுறைபடுத்தப்படும் என்றும் கூறினார்.

பணிநிரந்தரம், ஊதியத்துடன் கூடிய ஒருநாள் விடுப்பு, மகப்பேறு விடுப்பு போன்ற கோரிக்கைகள் குறித்து முதலமைச்சரிடம் கலந்து பேசி தூய்மை பணியாளர்களின்நலன்கள் காக்கப்படும் என்றார்.

***************

சிறப்பு கவன ஈர்ப்பு

பொங்கல் பண்டிகை இலவச வேட்டி சேலை திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு 8 முழ வெளுக்கப்படாத வேட்டிகளுக்கு பதிலாக 4 முழ வெளுக்கப்பட்ட வேட்டிகள் வழங்கப்படும் என்று மாநில கைத்தறி துறை அமைச்சர் திரு.விஜய் பாலாஜி கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதுதொடர்பான கவன ஈர்ப்பிற்கு பதில் அளித்த அமைச்சர் இந்நடவடிக்கையால் நெசவாளர்களுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாது என்று கூறினார்.

பொதுமக்கள் விரும்பும் வகையில் புதிய ரக வேட்டி சேலைகளை உற்பத்தி செய்து வழங்க அரசு முடிவு செய்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

***************

கேள்வி நேரம் ஆதவ் அர்ஜூனா

டெல்டா மாவட்டம் மற்றும் தென் மாவட்டங்களில் சாலைகளை அகலப்படுத்தும் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜூனா சட்டப்பேரவையில் இன்று தெரிவித்தார்.

கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், முதற்கட்டமாக மதுரை தேனி மாவட்டங்களில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

உசிலம்பட்டி மற்றும் ஆண்டிப்பட்டிக்கு இடையே புறவழிச்சாலை அமைக்கும் பணிகளை அரசு ஆய்வு செய்து வருவதாக குறிப்பிட்டார்.

தேசிய நெடுஞ்சாலையோடு இணைக்கும் பல்வேறு இணைப்பு சாலைகளில் அதிக அளவு சாலை விபத்துகள் நடைபெறுவதால் இவற்றை அகலப்படுத்துவதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

கே.வி.குப்பம் பிரதான சாலைக்கு புறவழிச்சாலை அமைப்பக்கும் நில எடுப்பு பணிகளுக்காக 947 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

திருச்சி நகரிலிருந்து வயலூர் முருகன் திருக்கோவிலுக்கு செல்லும் சாலை திட்டப்பணிகள் விரைந்து முடிக்கப்படும் என்றார்.

## பேரவையில் கேள்வி நேரத்தின்போது வெளியான மேலும் சில தகவல்கள்

பாரத பிரதமரிடம் ஒப்படைத்துள்ள சோழர்கால ஆனைமங்கல செப்பேடுகள் விரைவில் தமிழகத்திற்கு கொண்டுவரப்படும்

என்றும், நாகையில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்படும் என்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் கூறினார்.

நாகப்பட்டினம் அரசு அருங்காட்சியகம் புதுப்பிக்கப்பட்டு விரைவில் பொதுமக்களின் பார்வைக்கு திறந்துவைக்கப்படும் என்றார்.

சம்புவராயருக்கு மணிமண்டபம் அமைப்பது,

மதுரை காந்தி அருங்காட்சியகத்தை விரைவில் திறப்பது,

தஞ்சையில் உள்ள சோழர்கால அருங்காட்சியக பணிகளை விரைந்து முடிப்பது ஆகிய நடவடிக்கைகளில் அரசு தீவிரம் காட்டி வருவதாகவும் கூறினார்.

பல்லாவரம் நகரில் உள்ள மறைமலை அடிகளார் இல்லத்தை புதுப்பிப்பதற்க்கான பணிகளும் மேற்கொள்ளப்படும் என்றார்.

---------------

அரூர் தொகுதி தீர்த்தமலை அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோவிலுக்கு செல்லும் பக்தர்களின் வசதிக்காக உரிய அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.ராஜேஷ்குமார் தெரிவித்தார்.

ஊட்டி, கொடைக்கானல் சுற்றுலாத்தலங்களை மேம்படுத்துவதற்கும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றவும் தொலைநோக்கு பார்வையுடன் அரசு ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றார்.

ஏலகிரி மலை பகுதியில் பார்வையாளர்கள் கோபுரம் அமைப்பது ஆலங்குளம் பகுதியில் உள்ள தர்காவை சீரமைப்பது

உள்ளிட்ட பணிகள் குறித்து ஆய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

-------------

சமூக நல கூடங்கள் தேவைப்படும் அனைத்து இடங்களிலும் சமூக நீதித்துறையின் சார்பில் கட்டிரத்தரப்படும் என்று இத்துறைக்கான அமைச்சர் திரு.வன்னியரசு கூறினார்.

ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இளையபெருமாள், நல்லூரில் உள்ள ஆதி திராவிடர் நல தொடக்கபள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

-------------

மானியக்கோரிக்கை - வினோத்

தஞ்சை மயிலாடுதுறை புதுக்கோட்டை தர்மபுரி சேலம் திருப்பூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 11 கோடியே 64 லட்ச ரூபாய் நிதியில் 9 புதிய விதை சேமிப்பு கிடங்குகள் அமைக்கப்படும் என்று வேளாண் அமைச்சர் திரு.வினோத் கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று தமது துறை மானிய கோரிக்கையை தாக்கல் செய்து பேசிய அமைச்சர் கள்ளக்குறிச்சி திருத்தணி சர்க்கரை ஆலைகளில் நவீன சுழல் வடிவ கரும்பு பிரி திறன் இயந்திரம் மற்றும் மின் மோட்டார்கள் 8 கோடியே 58 லட்ச ரூபாய் நிதியில் நிறுவப்படும்,

செங்கல்ராயன், திருத்தணி வேலூர் மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளில் தலா இரண்டு வடிகலன் பகுதிகள் 6 கோடி ரூபாய் செலவில் தானியங்கி மயமாக்கப்படும் என்றார்.

தமிழ்நாட்டில் உள்ள 285 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் வருவாயை மின்னணு முறையில் சேகரிக்க 600 விற்பனை முனைய கருவிகள் நிறுவப்படும் என்றும் தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தில் ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களின் திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு பயிற்சி மையம் அங்கு அமைக்கப்படும் உள்ளிட்ட 34 புதிய அறிவிப்புகளை அமைச்சர் வினோத் இன்று வெளியிட்டார்.

****************

விக்னேஷ் - மானியேகோக்கை

மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை தொடர்பான புதிய அறிவிப்புகளை வெளியிட்ட இத்துறைக்கான அமைச்சர் திரு.விக்னேஷ் கள்ளச்சாராயம் கள்ள மதுபான விற்பனையில் ஈடுபட்டு சிறை தண்டனை அனுபவித்து விடுதலை ஆகி மனம் திருந்தியவர்களுக்கு வழங்கப்படும் மறுவாழ்வு நிதி ஒருலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றார்.

மதுவிலக்கு அமலாக்கப்பிரிவிற்கு 2 கோடியே 58 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் நவீன உபகரணங்கள் மற்றும் புதிய வாகனங்கள் வழங்கப்படும் என்றும் மதுவினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கான நிதி 10 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

****************

ஜெகதீஸ்வரி மானியக்கோரிக்கை

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை தொடர்பாக மானியக்கோரிக்கையில் புதியஅறிவிப்புகளை வெளியிட்ட சமூக நலத்துறை அமைச்சர் திருமதி ஜெகதீஸ்வரி தமிழ்நாட்டில் நகர்புற பகுதிகளில் 300 குழந்தை மையங்களுக்கான கட்டிடங்கள் 51 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்றார்.

நகர்புற பள்ளிகளில் செயல்படும் 123 சத்துணவு மையங்களுக்கு புதிதாக வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டிடங்கள் 11 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்றார்.

***************

குடியரசு தலைவர்

நாட்டின் ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை பிரிவு லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்திற்கு வகை செய்வதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப கல்வி நிறுவன பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், மாணாக்கர் உலகளாவிய பார்வையுடன் நாட்டின் வளமான, கலாச்சார, பாரம்பரிய மரபுகளை முன்னெடுத்து செல்வதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

ஆடை வடிவமைப்பு துறையில் பெண்களின் பங்களிப்பை வரவேற்ற அவர், இத்துறையை விரிவுபடுத்த நம் நாட்டில் ஏராளமான திறன்கள் குவிந்திருப்பதாக குறிப்பிட்டார்.

சர்வதேச சந்தைகளின் போட்டி திறன் மற்றும் நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு மாணாக்கர் தங்களது அறிவுத்திறன் படைப்பாற்றல் திறன் புதுமையான சிந்தனைகளை இணைத்து செயலாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டாார்.

வளர்ச்சி அடைந்த பாரத பாதையில் மாணாக்கர் வேலை தேடுபவர்களாக இல்லாமல், வேலை வழங்குபவர்களாகவும், வேலை வாய்ப்புகளை உருவாக்குபவர்களாகவும் திகழ வேண்டும் என்றும் வாழ்த்தியுள்ளார்.

***************

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி கிர்கிஸ்தான், ரஷ்யா ஈரான் அர்மேனியா நாட்டு தலைவர்களுடன் இன்று பைஷெக்கில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

நாளை 26ஆவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் அவர் உரையாற்றுகிறார்.

முன்னதாக பைஷெக்கில் இந்திய வம்சாவளியினரை சந்தித்து பிரதமர் கலந்துரையாடினார்.

அம்மக்களின் ஆற்றல், உத்வேகத்தை பாராட்டிய பிரதமர், இந்தியா கிர்கிஸ்தான் இடையே இணைப்பை வலுப்படுத்துவதில் அவர்களின் பங்களிப்பை எடுத்துரைத்தார்.

பைஷெக்கில் அமைந்துள்ள மகாத்மா காந்தியடிகளின் நினைவிடத்தில் பிரதமர் இன்று அஞ்சலி செலுத்தினார்.

***************

மேட்டூர்

மேட்டூர் அணை டெல்டா பாசனத்திற்காக நாளை திறக்கப்படுகிறது.

இதற்கான முன்னேற்பாட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக எமது சேலம் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

இதனிடையே மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 10 ஆயிரத்து 485 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 90.92 அடியாகும்.

அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக இரண்டாயிரம் கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 11 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

தொடர்ந்து 15ஆவது நாளாக பரிசல் இயக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

****************

கோவில்

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் ஆவணி திருவிழா இன்றுகாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வரும் 9ஆம் தேதி நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

****************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது